| 22 | R.Sridhar Sigh | 26.05.1993 | 4.25 pm | Vanamadevi | Rishabam | Rohini | | | Vanamadevi | 9941679484 |
| 23 | Ramkumar | 10.03.1987 | 03.30 pm | Kallakurichi | Midhunam | Punarpoos-am | BE ECE | Barathi Multi ser-vice | Kallakurichi | 9655979120 |
| 24 | S.Amar Singh | 23.09.1986 | 10.20 am | Chennai per-ambur | Kiruthikai | Rishabam | BE | vestas Medch.Er | | 9962210446 |
| 25 | T. Sannathkumar | 01.05.1996 | 03.10 pm | Ambur Vellore | Kanni | Hastham 4 | BBA | Vivo Team Leader | Maliyap-pattu Ambur | 9585214110 |
| 26 | Dhilip | 07.01.1994 | 08.05 am | Ranipet | Thulam | Visakam 1 | Dip. Civil | Site Er | Valajapettai | 8220217012 |



# ராஜபுத்திர பொந்தில் திருமணச் சடங்கு முறைகள்

பேரன்புமிக்க, ராஜபுத்திர (பொந்தில்) சமுதாயத்தைச் சார்ந்த அனைவருக்கும் வணக்கம்.

ராஜபுத்திர (பொந்தில் திருமணச் சடங்கு முறைகள் என்னும் இச்சிறு நூல் சம்பிரதாயமுறைப்படி எவ்வாறு திருமணம் நடத்துவது என்பதைப் படித்துணர்வதற்கு ஏதுவாக பெரியவர்களது ஆலோசனைப் படியும் அவர்களது அறிவுறுத்தலின்படியும் குறிப்பாக முன் வைக்கப்பட்டுள்ளது. இதில் தற்பொழுது நடைமுறையில் உள்ள சில சடங்குகள் மட்டுமே சுட்டப்பட்டுள்ளது. முன்னோர்கள் விட்டுச்சென்ற சடங்குகள் சில விடுபட்டிருக்கலாம் அல்லது பிற் சேர்க்கையாக நடைமுறை வாழ்க்கைக்கு ஏதுவாக சில சடங்குகள் சேர்ந்திருக்கலாம் எதுவும் காலப்போக்கில் மறைந்து விடக்கூடாது என்பதற்காக இச் சடங்கு முறை நூலை வெளியிடுவதில் பெருமை அடைகிறேன். இந்நூல் உருவாக்கத்திற்கு உறுதுணையாக இருந்த சொக்கம்பட்டி, திருமதி. கௌரி பாய் சிவராம் சிங் அவர்கள், திருநெல்வேலி, திருமதி. ராம்பியாரிபாய் நிரஞ்சன் சிங் அவர்கள், மதுரை, திருமதி. கமலா பாய் கோவிந்த் சிங் அவர்கள், வத்தலகுண்டு, திருமதி. வனஜா பாய் அவர்கள் திருமதி. ஜெகஜோதி பாய் அவர்கள். திருநெல்வேலி, திருமதி. சரஸ்வதி பாய் ஹரிராம்சிங் அவர்கள் மற்றும் இச்சிறு தொண்டினைச் செய்ய உதவிய நம் சமுதாயப் பெரியவர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ராஜபுத்திர (பொந்தில்) சமுதாயத் திருமணச் சடங்கு முறைகள் பாரம்பரியமிக்கதாகவும், முன்னோர்கள் வகுத்துச் சென்ற சம்பிர்தாய முறைப்படியும் இன்றளவும் பின்பற்றப்படுகிறது.

அதனடிப்படையில் பின்வருமாறு திருமணச்சடங்கு முறைகள் நடைமுறையில் உள்ளன

அவைகள் :

1. ஹல்தி குச்சல்னா
2. பரி போடுதல்
3. சீலா சிலானா
4. கலஸ் கோட்னா
5. மாத்தா பூஜா
6. டீக்கா
7. மகர் மட்டி
8. கம்பஸ்தான்
9. காப்புக்கட்டுதல்
10. தேள் சடானா
11. பாவ்டி பூஜா
12. சால்னி மற்றும் பராத்
13. கௌரி பூஜா
14. பௌரி
15. நிம்போலிதாரன்
16. மஞ்சள் நீராடல்

போன்ற சடங்கு விபரங்கள் விரிவாகச் சுட்டப்பட்டுள்ளது. இச்சடங்கு முறைகள் பற்றிய செய்திகள் நமது சமுதாயத் திருமணத்திற்கும் பேருதவியாக இருக்கும் என எண்ணுகிறேன்.

இப்படிக்கு,

Dr. R. லட்சுமணசிங், M.A.,M.Phil.,M.Ed., Ph.D.,

பேராசிரியர், தமிழாய்வுத்துறை,
அரசினர் கலைக் கல்லூரி (தன்னாட்சி),
கரூர்-639005.

# ராஜபுத்திர பொந்தில் திருமணச் சடங்கு முறைகள்

மணமகன், மணமகள் ஆகியோர் சம்பிரதாயப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் நல்லநாளில் சம்பந்திகள் பாக்கு, வெற்றிலை, மாற்றிக் கொள்வார்கள். ஒரு சிலர் நிச்சயித்தல் என்ற சடங்கையும் செய்து முடிப்பர் அல்லது திருமணத்திற்கு முதல் நாள் நிச்சயதார்த்தம் நிகழ்ச்சியை செய்வர். இந்நிகழ்ச்சி அவரவர் விருப்பப்படி நிறைவேற்றுவார்கள். மணமக்கள் நிச்சயித்த பிறகு வீட்டில் சில சடங்கு முறைகளைச் செய்வார்கள். அதில் முதல் சடங்காக செய்வது ஹல்தி குச்சல்னா (மஞ்சள் இடித்தல்) என்பதாகும். சுப நாளைத் தேர்ந்தெடுத்து இச்சடங்கைச் செய்யவேண்டும்.

### 1.ஹல்தி குச்சல்னா (மஞ்சள் இடித்தல்)

1.

மஞ்சள் இடிப்பதற்குத் தேவையான விரலி மஞ்சளை வாங்கிக் கொள்ளவேண்டும். அதனை இடிப்பதற்கு உரலை ஏற்பாடு செய்யவேண்டும். உரலுக்கு சந்தனம், குங்குமம் இடவேண்டும். பிறகு உரலில் விரலி மஞ்சளைப் போட்டு சுமங்கலிகள் ஒவ்வொருவராக வந்து இடிக்க வேண்டும். இடிக்கப்பட்ட மஞ்சள் தூளை டிக்கா முடிந்தபிறகு சுமங்கலிகளுக்கு வழங்கவேண்டும்.

### 2. பரிபோடுதல் (வடகம் போடுதல்)

200 கிராம் எடையுள்ள குத்துப் பருப்பு (உளுத்தம் பருப்பு) ஊற வைத்து அதனை அரைத்து எடுத்த மாவினால் பரி போடவேண்டும். அப்பரிக்கு வெற்றிலை, பாக்கு, பழம் ஆகியன வைத்து சூடம் ஏற்றி பூஜை செய்ய வேண்டும். இப்பரியை (வடகத்தை) கௌரி பூஜையின் போது சுமங்கலிக்கு வழங்கப்படும் தாம்பூலத்துடன், ஜாக்கெட் துணி மற்றும் பரியையும் சேர்த்துக் கொடுக்கவேண்டும்.

### 3. சீலா சிலானா (நவதானியத்தை முறத்தில் இட்டுப் புடைத்தல்)

சீலா சிலானா என்பது நவ தானியங்களை முறத்தில் இட்டுப் புடைக்கும் திருமணச் சடங்காகும். இந்நிகழ்ச்சி மாப்பிள்ளை மற்றும் பெண் வீட்டினர் மேற் கொள்ளவேண்டும். முதலில் மாப்பிள்ளை வீட்டில் இந்நிகழ்ச்சியினைத் தொடங்க வேண்டும். அடுத்து பெண் வீட்டில் தொடங்க வேண்டும். மாப்பிள்ளை வீட்டிற்கு 5 முறம், பெண் வீட்டிற்கு 7 முறம் வாங்க வேண்டும்.

#### செய்யும் முறை:

சுளவுகளுக்கு மஞ்சள் பூசப்பட்டு அதற்குரிய வலது புறத்தில் காப்புக் கட்டவேண்டும்.

#### காப்பிற்குத் தேவையான பொருட்கள் :

மஞ்சள் நீரில் நனைத்த நூல் கயிற்றில் வெற்றிலை பாக்கு, ஒரு விரலி மஞ்சள், சிறிய இரும்பு வளையம் சேர்த்து காப்பு அமைத்துக் கட்டவேண்டும்.

#### சுளவில் போடவேண்டிய பொருட்கள்: (மாப்பிள்ளை வீட்டிற்கு 5 சுளவுகள்)

1. விரலி மஞ்சள் - 200 கிராம்
2. திரவியப்பொடி சாமான்கள்:
   * கஸ்தூரி மஞ்சள் - 100 கிராம்
   * பூலாங்கிழங்கு - 100 கிராம்
   * விளாமிச்சை வேர் - 100 கிராம்
   * வங்காளப்பச்சை - 100 கிராம்
   * செண்பக மொட்டு - 100 கிராம்
   • ரோஜா இதழ்கள் - 50 கிராம்
   * வெற்றி வேர் - 20 கிராம்
   * கோஷ்டம் - 50 கிராம்
3. பாசிப்பயிறு - 250 கிராம்
4. கொண்டைக் கடலை - 250 கிராம்
5. கோதுமை - 250 கிராம்

# ராஜபுத்திர பொந்தில் திருமணச் சடங்கு முறைகள்

(பெண் வீட்டிற்கு 7 சுளவுகள்)

1. விரலி மஞ்சள் - 250 கிராம்
2. திரவியச் சாமான்கள் - 250 கிராம்
 (மேலே குறிப்பிட்டபடி )
3. பாசிப்பயிறு - 250 கிராம்
4. கொண்டைக்கடலை - 250 கிராம்
5. கோதுமை - 250 கிராம்
6. நெல் - 250 கிராம்
7. கடலைப்பருப்பு - 250 கிராம்

சீலாசிலானா செய்யும் சுமங்கலிப் பெண்களுக்குச் சந்தனம், குங்குமம் பூ, கொடுக்கவேண்டும். .அதன்பிறகு சுமங்கலிப் பெண்களின் மடியில் மணமக்கள் குடும்பத்தார் மஞ்சள் கிழங்கு, அச்சுவெல்லம், வாழைப்பழம் மற்றும் வெற்றிலை, பாக்கு வைக்கவேண்டும். அதன்பிறகு இரு கைகளால் மூன்று முறை பச்சரிசியை மடியில் இட வேண்டும்.

இந்நிகழ்ச்சிக்குப் பிறகு ஐந்து சுமங்கலிகள் ஐந்து சுளவுகளில் உள்ள பொருட்களை லேசாகப் புடைத்து விட்டு அடுத்த சுமங்கலிப் பெண்ணிடம் கொடுத்து ஒவ்வொருவரும் புடைத்துத் தனித்தனியாக வைக்க வேண்டும். பொருட்களைக் கலந்து விடக்கூடாது.

இதேபோன்று பெண்வீட்டார் ஏழு சுமங்கலிப் பெண்களைக் கொண்டு மேற்குறிப்பிட்டவாறு செய்ய வேண்டும்.

குறிப்பு: திரவியப் பொருட்களை இடித்துப் பொடியாக்கி மணமக்களுக்கு மஞ்சள் பூசும் சடங்கின் போது பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

### 4. கலஸ்கோட்னா: (மண்பானையை அலங்கரித்தல்)

சுபமுகூர்த்த இடத்தில் வைக்கும் வகையில் சிறிய அளவிலான புதிய மண் பானைகள் இரண்டு எண்ணிக்கையில் வாங்கவும். அதை மூடி வைக்கக்கூடிய அளவில் நான்கு (பரியா) மூடிகள் வாங்க வேண்டும்.

செய்யும் முறை :

மண்பானை மற்றும் மூடிகளுக்கு மஞ்சள் பூசவும். இருபானைகளுக்கும் பசுஞ்சாணத்தைக் கொண்டு தடித்த அளவில் சந்திரன், சூரியன், சுவஸ்திக் போன்ற குறிகளை வரிசையாக இட வேண்டும். வரைந்த பசுஞ்சாணத்தில் கடலைப் பருப்பினை நடுவில் ஒட்டப்பட வேண்டும். இரு ஓரங்களிலும் நெல் மணிகளை ஒட்டவேண்டும்.

## திருமண மண்டபத்தில் மேற்கொள்ள வேண்டிய நிகழ்ச்சிகள்

### 5.மாத்தா பூஜா (அம்மன் பூஜை)

திருமண நாளிற்கு முந்தைய நாள் மாலை 6-00 மணியளவில் அம்மன் பூஜைக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

செய்யும்முறை:

பித்தளைச் செம்புக்கு (கலசம்) மஞ்சள் பூசி, மஞ்சள் நனைத்த நூலைச் சுற்றிக் கொள்ளவேண்டும். அக்கலசத்தில் நிறைய நீர் ஊற்ற வேண்டும். அந்த நீரினுள் விரலி மஞ்சள், வெற்றிலை பாக்கு, ஒன்றேகால் ரூபாய் (1 1/4 ) நாணயம் இடவேண்டும். பிறகு கலசத்தை மாவிலை மற்றும் மஞ்சள் பூசிய தேங்காயை வைத்து அலங்கரிக்க வேண்டும். கலசம் வைக்கக்கூடிய இடத்தை மெழுகிக் கோலமிட்டு கலசம் வைக்கும் இடம் அடங்கிய சுவற்றில் வலது கையை மஞ்சளில் நனைத்து ஒன்பது தாப்னா (கை அச்சு) (வரிசைக்கு மூன்றாக மூன்று வரிசை) அமைக்க வேண்டும். பிறகு, கை அச்சான தாப்னாவின் விரல் நுனியில் மற்றும் நடுவினில் சந்தனம், குங்குமம் இடவேண்டும்.

# ராஜபுத்திர பொந்தில் திருமணச் சடங்கு முறைகள்

### 6. டீக்கா (பரிசம் போடுதல்)

திருமண நாளிற்கு முந்தைய நாள் இரவு 7-00 மணியளவில் சபையில் நடக்கும் நிகழ்ச்சி டீக்கா என வழங்கப்படுகிறது. டீக்கா நடைபெறும் இடத்தில் கோலமிட்டு அலங்கரிக்கவேண்டும் பிறகு மணமகனை கிழக்கு நோக்கி அமர வைத்து மணப்பெண்ணின் சகோதரர் (மைத்துனர்) மணமகனுக்குச் சந்தனம், குங்குமமிட்டு பூமாலை அணிவித்துப் புத்தாடை வழங்கவேண்டும். இந்நிகழ்ச்சியில் அவரவர் வசதிக்கேற்ப அணிகலன்கள் அணிவிக்கலாம். அதன்பிறகு மணப்பெண்ணின் சகோதரனைக் (மைத்துனர்) கிழக்கு நோக்கி அமரவைத்துச் சந்தனம், குங்குமமிட்டு, பூமாலை அணிவித்துப் புத்தாடை வழங்கவேண்டும். இந்நிகழ்ச்சியில் மணமகன் மணப்பெண்ணின் சகோதரனுக்கு விரும்பினால் கணையாழி (மோதிரம் ) அணிவித்து மகிழலாம். பிறகு மணமகனுக்கு மணப் பெண்ணின் சகோதரர் வாழைப்பழம் ஊட்டி மகிழவேண்டும். அதே போன்று மணமகளின் சகோதரனுக்கும் மேற்குறிப்பிட்ட சம்பிரதாயத்தைப் பின்பற்றவேண்டும். தொடர்ந்து மணமகன், மணமகளின் சகோதரன் இருவரையும் ஒன்றாக அமர வைத்து ஆரத்தி எடுக்கவேண்டும். அதன்பிறகு மணமகளுக்கு மணமகனின் சகோதரி மேற்குறிப்பிட்டவாறு இச்சடங்குகளைச் செய்து ஆரத்தி எடுத்து இச்சம்பிரதாயத்தை நிறைவு செய்ய வேண்டும்

### .7. மகர் மட்டி (முகூர்த்தக்கால் ஊன்ற மணல் எடுத்தல் )

'மகர் மட்டி' என்பது முகூர்த்தக்கால் ஊன்றத் தேவையான மணலை எடுத்து வருவதற்காகச் செல்லும் சம்பிரதாய முறையாகும் மகர் மட்டி எடுக்க மணமகனின் சகோதரி மற்றும் அவர் கணவர் (அத்தான்) அதே போன்று மணமகளின் சகோதரி மற்றும் அவர் கணவர் (அத்தான்) ஆகியோர் தங்களை சந்தனம் குங்குமம் மற்றும் காய்கறிகள் கொண்ட மாலையமைத்து அலங்கரித்துக் கொண்டு மணமகனின் அத்தான் தனது தோளில் மண்வெட்டியுடன் குழுவாக மேளதாளத்துடன் நீர்த்துறைக்குச் செல்லவேண்டும். மணமகனின் சகோதரி பானையுடன் உடன் செல்லவேண்டும். அங்கு குடம் நிறைய தண்ணீர் முகர்ந்து கொண்டு, நீர் எடுக்கும் இடத்தில் மஞ்சள் பொடியினால் படத்தில் உள்ளவாறு கோலமிடவேண்டும். கோலத்தின் நடுவில் சந்தனம், குங்குமமிடவேண்டும். அக்கோலத்தின் மேல் நிறை குடத்தை வைக்கவேண்டும். அக்குடத்தின் முன் வாழை இலை விரித்து வைத்து வெற்றிலை, பாக்கு, தேங்காய், பழம் ஆகியவற்றை வைத்துப் பூஜை செய்ய வேண்டும். மணமகன் வீட்டைச் சார்ந்த ஐந்து சுமங்கலிப் பெண்களும், மணமகள் வீட்டின் சார்பாக ஏழு சுமங்கலிப் பெண்களும் அத்தான் மண்வெட்டி மூலம் வெட்டி எடுத்த மணலை மடியில் பெற்று முகூர்த்தக்கால் அமைக்கும் இடத்திற்குக் கொண்டு செல்லவேண்டும்.

### 8. கம்பஸ்தான் அமைத்தல்

மாமரத்தில் செய்யப்பட்ட கம்பஸ்தான் கட்டையினை நடுவில் நிறுத்தி சுமங்கலிப் பெண்களால் கொண்டுவரப்பட்ட மகர் மட்டியினைக் (மணல்) கொண்டு கம்பஸ்தானை ஊன்ற வேண்டும்.

**முளைப்பாரி குறிப்பு:**
திருமணம் நடைபெறும் 5 அல்லது நாட்களுக்கு முன்பாக வீட்டினில் நவதானியத்தை ஊறவை மணலில் தூவி நிழல் பகுதியில் வைத்து முளைப்பாரியை முளைக்க வைக்க வேண்டும். அவ்வாறு

# ராஜபுத்திர பொந்தில் திருமணச் சடங்கு முறைகள்

முளைத்த முளைப்பாரி முகூர்த்தக்கா போடுமிடத்திற்குக் கொண்டுவரவேண்டும்.

கம்பஸ்தானை வேதம் ஓதும் அய்யர் வாயிலாக மாங்க தர்ப்பை, பூச்சரம் ஆகியன கொண்ட காப்பினை மேளதாளத்துடன் அமைக்கவேண்டும். கம்பஸ்தானின் முன்புறம் அலங்கரிக்கப்பட்ட கலசத்தை அசையாமல் அமைத்து, நீர்த்துறையில் இருந்து மணமகளின் சகோதரி கொண்டு வந்த நிறைகுட நீரை அலங்கரிக்கப்பட்ட கலசத்தில் ஊற்றவேண்டும். அலங்கரிக்கப்பட்ட கலசத்தைச் சுற்றிலும் நன்கு வளர்த்த முளைப்பாரியைக் கொண்டு கலசம் அசையாமல் அமைக்கவேண்டும். பிறகு நீர் நிரப்பப்பட்ட கலசத்தை மூடுவதற்கு முன் கலசத்தினுள் வெற்றிலை, பாக்கு, விரலிமஞ்சள், ஒன்றேகால் ரூபாய் (1 /14 ) நாணயம் இடவேண்டும். அதன்பின் கலசத்திற்கென ஏற்பாடு செய்யப்பட்ட இரண்டு மூடிகளில் (பரியா) ஒன்றினைக் கொண்டு மூடிவிடவேண்டும். மூடிய அந்த பரியாவில் பச்சரிசியைப் பரப்ப வேண்டும். பச்சரிசிப் பரப்பப்பட்ட பரியாவின் மீது மற்றொரு பரியாவை அமைத்து அதில் நல்லெண்ணை விட்டு திரிபோட்டு தீபமேற்ற வேண்டும்.

### 9. காப்புக் கட்டுதல்

கம்பஸ்தானின் அருகில் அம்மி மற்றும் குழவிவைக்கவேண்டும். அம்மி மற்றும் குழவிக்குச் சந்தனம், குங்குமமிட்டு அலங்கரிக்க வேண்டும். இதனுடன் நான்கு சிறிய கலசங்கள் வைத்து அம்மன் பூஜையில் வைத்த அட்டேலி (கோதுமை, சர்க்கரை சேர்த்த பொருள்) இடவேண்டும். வேதவிற்பனரை வைத்து கம்பஸ்தான், அம்மி, குழ' விளக்கு எரியும் கலசம் மற்றும் நான்கு சிறிய கலசத்திற்கு வேதம் ஒலிக்க மேளதாளத்துடன் காப்புக் கட்டவேண்டும்.

பிறகு நனைய வைத்த உளுத்தம்பருப்பை மணமகனின் தாய், தந்தை ஆகியோர் அம்மியின் எதிரெதிர் அமர்ந்து அவ்வுளுத்தம் பருப்பை அரைக்க வேண்டும். அரைத்த மாவினைக் காப்புக்கட்டிய இரண்டு சிறிய கலசங்களை மூடிவைத்து அதனைக் காற்றுப் புகாவண்ணம் உளுத்தம் மாவினைக் கொண்டு அடைக்க வேண்டும்.அதே போன்று. அதே மணமகளின் தாய், தந்தை மேற்குறிப்பிட்டவாறு மீதமுள்ள இரண்டு கலசங்களுக்கு செய்ய வேண்டும். மூடிய கலசங்கள் நான்கினையும் பவ்யமாக கம்பஸ்தான் அருகில் வைத்து விடவேண்டும்.

### 10. தேள் சடானா (எண்ணெய் நலுங்கு)

எண்ணெய் நலுங்கு செய்யக்கூடிய நிகழ்ச்சியின் போது மணமகன் அணிந்து கொள்ள மணமகளின் வீட்டார் (4 1/2 ) முழம் மல் வேட்டியும், தலையில் கட்டிக் கொள்ளவும் மற்றும் தோளில் போட்டுக் கொள்ளவும் நேரியல் (துண்டு) வழங்கவேண்டும். வழங்குவதற்கு முன் மணமகளின் வலது கையினால் மஞ்சள் தடவப்பட்ட கை அச்சு, வேட்டி மற்றும் நேரியல்களில் பதித்து மணமகனின் வீட்டாரிடம் ஒப்படைக்கவேண்டும். அதை அணிந்து கொண்டுதான் மணமகன் எண்ணெய்ச் சடங்கினில் அமரவேண்டும்.

மேற்குறிப்பிட்ட வகையினில் மணமகள் அணியும் வகையில் மல் சேலை மற்றும் சோளி ஆகியவற்றை மணமகனின் வலது கையினால் மஞ்சள் தடவப்பட்டகை அச்சு பதித்து மணமகள் வீட்டாரிடம் மணமகன் வீட்டார் ஒப்படைக்க வேண்டும். மணமகள் அதை அணிந்து எண்ணெய்ச் சடங்கினில் அமரவேண்டும்.

மணமகன் எண்ணெய் நலுங்கிற்கு மாம்பலகையினில் அமர்ந்தபிறகு இருகைகளையும் சேர்த்தவாறு தேங்காய்

# ராஜபுத்திர பொந்தில் திருமணச் சடங்கு முறைகள்

மற்றும் ஹத்தோனா (அரிசி ரொட்டி) ஆகியவற்றைச் சேர்த்துப் பிடித்தவாறு இருக்க காப்புக்கட்டுவார்கள். மணமகளுக்கும் இதேமுறை பின்பற்றப்படும். எண்ணெய் நலுங்கு முடியும்வரை கொடுக்கப்பட்ட தேங்காய் மற்றும் ஹத்தோனாவைக் கையினில் பிடித்தவாறு இருக்கவேண்டும். மணமகன் வீட்டில் ஐந்து கன்னிப்பெண்கள் மற்றும் ஐந்து சுமங்கலிகள் பங்கு பெற வேண்டும் கன்னிப்பெண்கள் நல்லெண்ணெயிலும், சுமங்கலிகள் நனைத்த மஞ்சள் நீரிலும் செய்யும் சடங்காகும்.

முதல் கன்னிப்பெண் தனது இருகைகளில் தனித்தனியாக இரு மாவிலை பிடித்து எண்ணெயில் நனைத்து முதலில் கம்பஸ்தான் எரியும் கலசவிளக்கு, அம்மி, குழவி, ஆகியவற்றில் தடவவேண்டும். பிறகு மணமகனின் இருபாதம், இரு முழங்கால், மட் இருதோள்பட்டை மற்றும் உச்சந்தலையில் எண்ணெய் தடவவேண்டும். இவ்வாறு முதல் கன்னிப்பெண் பாதமதல் உச்சந்தலை வரை ஐந்து முறை செய்ய வேண்டும்.

ஆறாவது முறை தலையில் இருந்து பாதத்திற்கு எண்ணெய் மூலம் தடவ வேண்டும் இவ்வாறு மற்ற நான்கு கன்னிப்பெண்களும் மணமகனுக்கு மட்டும் இச்சடங்கைச் செய்யவேண்டும்.

முதல் சுமங்கலிப் பெண் எண்ணெய்க்குப் பதிலாக மஞ்சள் நீரில் மாவிலையால் தொட்டு மணமகனுக்குச் செய்யவேண்டும் மற்ற சுமங்கலிகள் மேற்சொன்னவாறு செய்யவேண்டும். மஞ்சள் நீரை மணமகனுக்கு மட்டும் பாதம் கால்முட்டி, கை, தோள்பட்டை, உச்சந்தலை என்ற முறையைப் பின்பற்ற வேண்டும் தலையிலிருந்து கீழ்நோக்கி வரக்கூடாது.

இச்சடங்கை மணமகளுக்கு ஏழு கன்னிப்பெண்கள், ஏழு சுமங்கலிப் பெண்கள் 5 முறை மஞ்சளை ஏற்றியும், 2 முறை மஞ்சளை இறக்கியும் செய்யவேண்டும். மணமகனுக்குச் சொல்லப்பட்டதைப் போன்று மணமகளுக்கும் அதே முறையினைப் பின்பற்ற வேண்டும். இச்சடங்கு செய்யும்போது மணமகன் பின்புறம் மணமகனின் தாய், தந்தையும் மணமகள் பின்புறம் மணமகளின் தாய், தந்தையும் நிற்க வேண்டும்.

அப்போது தாய், தந்தையருக்குச் சம்பந்திமுறை, மாமன்முறை உள்ளவர்கள் ‘சிக்கட்' செய்வார்கள். 'சிக்கட்' முறையுள்ளவர்கள் மணமக்களின் தாய், தந்தையருக்கு மாலை அணிவித்து சந்தனம், குங்குமம் பூசி புத்தாடை தருவார்கள். இச்சடங்குகள் முடிந்தபிறகு மணமகன், மணமகள் நீராடச் செல்லவேண்டும். நீராடிய பிறகு அணிந்திருந்த மல் துணிவகைகளை நீராடும் இடத்தில் விட்டுவிட வேண்டும் அல்லது சலவைத் தொழிலாளிக்குத் தந்து விடவேண்டும்.

மணமகள் நீராடி புத்தாடை அணிந்து வந்து அம்மன் பூஜையில் வைத்த கலசத்தின் முன் அமர வைத்து மூத்த சுமங்கலி ஒருவர் மணமகளுக்கு நெற்றியில் குங்குமம் வைத்துவிடவேண்டும்.

மணமகன் நீராடியபின் 'ஜாமாநீமா' உடுத்தி மொஹர்கிரீடம் வைத்து அலங்காரம் செய்யவேண்டும். மணமகனுக்கு மணமகனின் சகோதரி கண்ணுக்கு மை (காஜல் செடாவ) இடவேண்டும். (மொஹர் வைப்பதற்கு முன்பாக மணமகனுக்குப் பூமாலை அணிவித்து விடுதல் நன்று) அதன்பின், ஆரத்தி எடுக்க வேண்டும்.

### 11. பாவ்டி பூஜா

# ராஜபுத்திர பொந்தில் திருமணச் சடங்கு முறைகள்

### 13. சால்னி மற்றும் பாதாம்

1 மீட்டர் சிவப்பு நிறத் துணி எடுத்து மணமகனுக்கு தலைக்கு மேலே துணியின் நான்கு மூலையையும் நான்கு பேர் பிடித்துக் கொள்ள வேண்டும். (மணமகன் தலைக்கு மேல் பந்தல் போல் பிடித்துக்கொள்ள வேண்டும். ) துணியின் நான்கு மூலையிலும் ஒரு அரிசி பூரி, வெற்றிலை பாக்கு, 1 ரூ. நாணயம் வைக்க வேண்டும். நான்கு மூலையும் இணைப்பது போல் நூல் சுற்றி வரவேண்டும். இப்படி ஆறு முறை செய்ய வேண்டும். இப்படிச் சுற்றிய நூலையே மணமகனுக்குப் பூநூலாக்கி வித்தகர் வேதம் முழங்க பூநூல் அணிய வேண்டும். அதன்பின் பராத் செல்லவேண்டும். பராத்திற்குச் செல்லும்போது வெண்குதிரைக்கு மாலையணிவித்து ஒரு தேங்காயில் சூடம் ஏற்றி குதிரையை மூன்று முறை சுற்றிவந்து தேங்காயை விடலை விடவேண்டும். பராத் செல்லும்போது நான்கு வீதிகளுக்கு நான்கு விடலைகள் போடவேண்டும்.மாப்பிள்ளை பராத் சென்ற பின் மணமகளுக்கு கௌரிபூஜா செய்யவேண்டும்.

### 13. கௌரி பூஜா

கம்பஸ்தானிற்கு முன்பு ஐந்து ஜாக்கெட் துணி கண்ணாடி வளையல், மஞ்சள், சீப்பு, கண்ணாடி , வெற்றிலை, பாக்கு, பழம், பூ, குங்குமம், குங்குமச்சிமிழ் வைக்கவேண்டும். குங்குமச் சிமிழுடன் கண்மை டப்பாவும் வைக்கவேண்டும். ஐந்து சுமங்கலிப் பெண்கள் மணமகளை அழைத்துவந்து கம்பஸ்தான் முன்பாக அமர வைக்கவேண்டும். அந்த ஐந்து சுமங்கலிப் பெண்களும் உடன் அமரவேண்டும். சுமங்கலிப் பெண்களுக்கும், மணமகளுக்கும் முன்பாக வாழை இலை இடவேண்டும். ஒவ்வொரு இலையிலும் வாழைப்பழம் வைக்கவேண்டும். 5 ஜாக்கெட் துணிகளுக்கு முன்பாக அரிசி மாவு, மஞ்சள் பொடி கலந்து செய்த அகல் விளக்கு (கௌரை) வைக்கவேண்டும். அந்த கௌரைக்கு வெற்றிலை, பாக்கு, பழம் வைத்து ஊதுபத்தி ஏற்றி வைக்க வேண்டும். மணமகன் செந்தூரம் எடுத்து கௌரையில் வைக்கவேண்டும்.

### கௌரை வைக்கும் முறை

மணமகள் இடது கை மோதிர விரலும், கட்டை விரலும் இணைத்துச் செந்தூரத்தை எடுத்து கௌரைக்கு இடவேண்டும். அதன்பின் சுமங்கலி ஒருவர் கௌரைக்குக் கற்பூரம் காட்டி பூஜை செய்யவேண்டும்.

5 சுமங்கலிகளும் தங்கள் இலையில் வைத்துள்ள வாழைப்பழத்தில் சிறிதளவு எடுத்து மணமகளின் இலையில் வைத்து மணமகளைச் சாப்பிடச் செய்யவேண்டும். பின்பு 5 சுமங்கலிப் பெண்களும் ஜாக்கெட் துணியை எடுத்துக்கொள்ளலாம். அதன்பின் மணமகளுக்கு கன்னிகாதானம் செய்ய மஞ்சள் நிறப்புடவை அணிவிக்க வேண்டும்.

பராத் சென்று வந்து இறங்கிய பின் சம்பந்திகள் மற்றும் இருவீட்டார்கள் பூமாலை அணிவித்து மரியாதை செய்து கொள்ளவேண்டும். திருமண மண்டபத்தின் நுழைவாயிலில் மணமகளை அழைத்து வந்து நிறுத்தி மஞ்சள் துணியால் படுதா பிடித்துக்கொள்ளவேண்டும். (மணப்பெண் தெரியாத அளவிற்கு ) மணமகன் உள்ளே நுழையும்போது மணமகளை நோக்கி மணமகனும், மணமகனை நோக்கி மணமகளும் அரிசி, வெற்றிலை, பாக்கால் எறிந்து கொள்ள வேண்டும்.

இச்சடங்கு முடிந்தபின் மணமகளின் தங்கைகள் இருவர் மண்டப வாசலில் தேங்காய் முடியில் எண்ணெய் ஊற்றித் திரிபோட்டு விளக்கேற்றி நின்று கொள்வார்கள் மணமகனை இருக்கையில் அமரவைத்து மைத்துனன் சந்தனம், குங்குமம்

# ராஜபுத்திர பொந்தில் திருமணச் சடங்கு முறைகள்

பூசி பால், பழம் கொடுக்கவேண்டும். மணமகளின் தந்தை மணமகனின் கால்களைப் பலகையில் வைத்து அக்கால்களை அலம்பி விடவேண்டும். கழுத்துக்குச் சந்தனம் பூசி விடவேண்டும். நெற்றிக்குச் சந்தனம், குங்குமம் இடவேண்டும். மணமகளின் தாயார் மணமகனுக்கு ஆரத்தி எடுக்கவேண்டும். ஆரத்தி எடுத்த மணமகளின் தாயாருக்கு மணமகன் சன்மானம் தரவேண்டும். வாசலில் நிற்கும் மணமகளின் தங்கைகளுக்கும் மணமகன் விருப்பத்திற்கேற்ப சன்மானம் தரவேண்டும். அதன்பின்னரே மணமகனைத் திருமண மண்டபத்திற்குச்செல்லமணமகளின் தங்கைகள் அனுமதிப்பார்கள்.

### 14. பௌரி (மணமேடையை மணமக்கள் சுற்றுதல்)

மணமகள், மணமகன் இருவரும் மணமேடையில் உட்கார வேண்டும். இருவருக்கும் இடையில் மஞ்சள் துணியால் தடுப்பு இருக்கவேண்டும். பின்பு பெண் முதலிலும், அதன் பின்பு மணமகனும் மணமேடையைச் சுற்றத் தயாராகவேண்டும்.

இச்சமயத்தில் மணமகனின் சகோதரர் மூத்தவர் மஞ்சள் நிறச் சால்வையை மணமகளுக்குப் போர்த்தி விடவேண்டும். மணமகள் முன்னே செல்ல மணமகன் பின்னே செல்ல மணமேடையை 5 முறை சுற்ற வேண்டும் ஐந்தாவது முறை சுற்றும்போது மணமகளின் முதுகில் மணமகன் தன் வலது உள்ளங்கையைப் பதித்து விட்டு மணப்பெண்ணைப் பின்னுக்கு விட்டு மணமகன் முன்னே வரவேண்டும்.

ஒவ்வொரு சுற்றுச் சுற்றும்போது மணமகளின் சகோதரன் நெல்பொரி எடுத்து மணமகன் கை கீழும், மணமகள் கை மேலுமாக வைத்து நெல்பொரியைக் கொடுக்கவேண்டும். மணமக்கள் அந்த நெல்பொரியை ஹோமகுண்டத்தில் போட்டு விடவேண்டும். இப்படி ஒவ்வொரு முறையும் செய்ய வேண்டும், இதன்பின் மணமேடையில் அமர்ந்து கன்னிகாதானம் செய்ய வேண்டும். கன்னிகாதானம் முடிந்த பின் முகூர்த்த வேஷ்டி, சட்டை, நேரியல், புடவை, வளையல் மற்றும் திருமணப் பொருட்கள் அனைத்தும் தாம்பாளத்தில் வைத்து மணமக்களை ஆசீர்வதித்து இருவருக்கும் தரவேண்டும். மணமக்கள் அந்த ஆடையை அணிந்து மணமேடையில் அமான மணமகள் மணமகனுக்கு வலது புறத்தில் அமாடே மணமகளின் வலதுபுற இடுப்பில் 'சடவா பேட், -- இருக்கவேண்டும்.

(சடவா பேட்டியில் உள்ள பொருட்கள்:. சின்ன சுருக்கப்பையில் ஜாதிக்காய், ஏலக்காய், கசகசா, ஜாதிப்பத்திரி, கிராம் சின்னப் பாக்கெட்டில் செந்தூரம், 1 ரூ. நாணயம் இதுவே சடாவா பேட்டி எனப்படும்.)

### 15. நிம்போலிதாரன் (மாங்கல்யம் / தாலிகட்டுவது)

மணமகன் மணமகளுக்குச் செந்தூரம் இடவேண்டும். செந்தூரம் ஏற்றும்போது மணமகனின் இடது கை மோதிரவிரலும், கட்டை விரலும் சோத்து செந்தூரத்தை எடுத்து மணமகளின் நெற்றி வகிட்டிலிருந்து மேல்நோக்கி ஏற்றி இட வேண்டும். இப்படி மூன்று முறை செய்யவேண்டும். அதன்பின் மாங்கல்ய தாரணம் செய்யவேண்டும். மாங்கல்ய தாரணம் முடிந்தவுடன் சுமங்கலிப் பெண்களுக்கு 'சுகாவ் பீடா' தரவேண்டும்.

(சுகாவ் பீடாவில் வைக்கவேண்டிய பொருட்கள்: கசகசா 1ஸ்பூன், கற்கண்டு 1 ஸ்பூன், ஏலக்காய் 1, கிராம்பு 1 இத்துடன்

# ராஜபுத்திர பொந்தில் திருமணச் சடங்கு முறைகள்

செந்தூரம் 1 பாக்கெட், 1ரூ. நாணயம் அனைத்தும் கவரில் போட்டு சுமங்கலிப் பெண்களுக்குத் தரவேண்டும்.)

மாங்கல்ய தாரணம் முடிந்தவுடன் பூஜைசெய்த சிவப்புத் துணியில் ஒரு மூலையில் மஞ்சள் கிழங்கு, வெற்றிலை பாக்கு, 1ரூ. நாணயம் வைத்து முடிந்து கொள்ளவேண்டும். இத்துணியின் வேறொரு நுனியில் மணமகளின் முந்தானைத் தலைப்பை முடிந்து கொள்ளவேண்டும். மஞ்சள் கிழங்கு முடிந்த முடிச்சை மணமகன் கையில் பிடித்துக் கொள்ளவேண்டும். பின் மணமகன் முன்னே செல்ல மணமகள் பின்னே செல்ல மணமேடையை இருமுறை சுற்றி வரவேண்டும். அப்படி இருமுறை சுற்றி வரும்போது மைத்துனர் மணமகன் கையைக் கீழேயும், மணமகள் கையை மேலேயும் வைத்து பச்சை நெல் தரவேண்டும். மணமேடையைச் சுற்றி வரும்போது பெண்ணுக்கு மெட்டி அணிவிக்க வேண்டும். சுற்றி வந்து முடிந்தபின் மணமகளின் தங்கைக்கு 'சாலி ஜோடா' தரவேண்டும்,

அதன்பின் மணமக்கள் அம்மன் பூஜை செய்த கலசத்திற்கு முன்பாக உட்கார்ந்து அங்குள்ள விளக்கில் கூடுதலாக ஒரு திரி போட்டு அந்த திரியை விளக்கேற்றி மணமகன் ஒரு மோதிரத்தால் அந்த விளக்கை அணையா வண்ணம் ஒரே ஜோதியாக்கி ஒளி கூட்டவேண்டும். இருவரும் அமர்ந்து பால் பழம் சாப்பிடவேண்டும். வெற்றிலை பாக்கு போட வேண்டும். ஒரு தாம்பாளத்தில் மஞ்சள் நீரைக் கரைத்து வைக்கவும். அதில் மணமகள் மணமகனின்கையில் உள்ள காப்பைக் கழற்றிப் போடவேண்டும். பின்பு மணமகன் மணமகளின் கையில் உள்ள காப்பைக் கழற்றிப் போடவேண்டும். அதன்பின் வெறும் தாம்பாளத்தில் மொஹரைக் (தலைப்பாகை) கழற்றிவைத்து வெற்றிலை பாக்கு, வைத்து சூடம் ஏற்றி மூன்று முறை சுற்றிவந்து கும்பிடவேண்டும். மொஹரைக் கழற்றிய பின் மணமக்கள் மாலை மாற்றிக் கொள்ளவேண்டும். பின் மொஹரையும், முளைப்பாரியையும் மற்ற இதர பொருட்களையும், கிணறு, ஓடும் நீரோடை அல்லது நீர், நிலைகளில் போடவேண்டும்.

பின் கிச்சடி அளக்கவேண்டும். 10 பங்கு பச்சரிசி, 1 பங்கு சிறு பயிறு கலந்து ஒரு பித்தளைப்பானையில் வைத்து மணமகள் அம்மா தட்டிலிருந்து தரவேண்டும். அதனுடன் அளக்க படியும் தரவேண்டும். பெண்ணும், மாப்பிள்ளையும் கிழக்கும், மேற்குமாக அமரவேண்டும். கலந்த அரிசியை ஒரு சமுக்காளத்தில் கொட்டி வைத்துக்கொள்ள வேண்டும். அந்த அரிசியை மணமகள் படியால் அளக்க வேண்டும். அந்த அரிசியை மணமகன் படியிலிருந்து லேசாகத் தட்டி கீழே போடவும். இப்படி மணமகள் 2 தடவை அளக்கவேண்டும். மணமகன் 2 தடவையும் தட்டி விடவேண்டும். 3-ஆவது தடவை படி நிறைய அரிசியை அளந்து அதை மணமகள் பானையில் போடவேண்டும்.

பின்பு கீழே கொட்டிய அரிசியில் இருந்து மணமகன் வலது கையால் எடுத்து மணமகனின் தாயார் மடியில் போடவேண்டும். மணமகள் தன் இரண்டு கையினாலும் இரண்டு தடவை மணமகனின் தாயார் மடியில் போடவேண்டும். பின்பு மற்ற எல்லா சுமங்கலிப் பெண்களுக்கும் இவ்வாறே போடவேண்டும். விருந்துக்குப் பின்பு ஊஞ்சல், மஞ்சள் நீராட்டு நடைபெற வேண்டும்.

# ராஜபுத்திர பொந்தில் திருமணச் சடங்கு முறைகள்

## 16. மஞ்சள் நீராடல்

அரிசி மாவு அல்லது கோதுமை மாவு எடுத்து அதில் மீன் உருவம் செய்து எண்ணெயில் பொரித்து எடுத்துக்கொள்ளவேண்டும். மூங்கிலில் வில் அம்பு செய்து கொள்ளவும். ஒரு குச்சியில் பூவைச் சுற்றிக்கொள்ளவும். பொரித்த மீனை ஒரு நூலில் கட்டிக்கொள்ளவும்.

ஒரு அகன்ற பாத்திரத்தில் மஞ்சள் நீர் எடுத்துக்கொள்ளவும். அந்த மஞ்சள் நீரில் நூலில் சுற்றிய மீனைப் போட்டு அந்நூலை மணமகள் தன் கையில் பிடித்து சுற்றிக்கொண்டே இருக்கவேண்டும். அப்படிச் சுற்றும்போது, மணமகன் வில்லில் அம்புதொடுத்து அந்த அம்பில் சுழலும் மீனைக் குத்தி எடுக்கவேண்டும். பின்பு பூச்சுற்றிய குச்சியால் மணமகள் மணமகனின் வலது தொடையில் அடிக்கவேண்டும். பின்பு, மணமகன் மணமகளை பூச்சுற்றிய குச்சியால் வலது தொடையில் அடிக்கவேண்டும். பூக்குச்சியினால் அடித்த பின்பு ஒரு ஜாக்கெட் துணியில் பூச்சுற்றி அதைக் குழந்தையாகப் பாவித்து அதை மணமகள் மணமகனிடம் குழந்தையைச் சிறிது நேரம் நீங்கள் வைத்துக்கொள்ளுங்கள் நான் சமைக்கவேண்டும் என்று கூறி குழந்தையை மணமகனிடம் தரவேண்டும் அதை கையில் வாங்கிய மணமகன் நான் வேலைக்குப் போக வேண்டும். இந்த குழந்தையை என்னால் சமாளிக்க முடியாது எனக்கூறி மனைவியிடமே தரவேண்டும் இவ்வாறு இவர்கள் பேசிக்கொண்டு இருக்கும்போது மாமியார் நானே இந்தக்குழந்தையைப் பார்த்துக்கொள்கிறேன். நீங்கள் இருவரும் தகராறு செய்யாமல் மகிழ்ச்சியாக இருங்கள் என்று கூறி எடுத்துக்கொள்ள வேண்டும்.

பூச்சுற்றிய குச்சியால் அடிப்பதற்கு முன்பாக ஒரு தட்டில் வெற்றிலை, பாக்கு, பழம், 4-பூஆரம், சந்தனம், குங்குமம், நல்லெண்ணெய் எடுத்துக் கொள்ளவும். பின் மணமகள் மணமகனுக்கு சந்தனம், குங்குமம், பூசி 2 பூ ஆரம் கழுத்தில் போடவேண்டும். சிறிது நல்லெண்ணெய் எடுத்து மணமகள் வகிட்டில் பூசி விடவேண்டும். பின்பு மணமகள் மஞ்சள் தண்ணீ ரை கையில் எடுத்து மணமகன் மடியில் தெளிக்கவேண்டும்.

அதேபோல் மணமகளுக்கு மணமகன் மஞ்சள் நீரை எடுத்து மடியில் தெளிக்கவேண்டும். பின்பு மணமக்கள் குளித்து கோயிலுக்குச் சென்று வந்து இல்லறத்தை நல்லறமாக்கி இனிதே வாழ்க்கையைத் தொடங்கவேண்டும்.

மணமக்கள் நீடுழி வாழ்க!

## TNRBA— தென் சென்னை சங்க கூட்டம்

தமிழ்நாடு ரஜ்புத் பொந்தில் - தென்சென்னை மாவட்ட கிளை சங்க கூட்டம் 21.03.2021 அன்று அசோக்நகர் ஹோட்டல் சரவணபவன் கலந்தாய்வு அரங்கில் மாலை 6 மணியளவில் நடைபெற்றது.



கூட்டத்திற்கு தென் சென்னை மாவட்ட தலைவர் திரு.நாகேஷ்வர சிங் அவர்கள் தலைமை தாங்கி வாழ்த்துரை வழங்கினார்கள். மாநில பொதுசெயலாளர் திரு.J.பிரகாஷ் சிங் அவர்களும், மாநில மகளிர் அணி தலைவி திருமதி. சோபாராணி பாலாஜிசிங் அவர்களும் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டார்கள். தென்சென்னை மாவட்ட செயலாளர் டாக்டர் M.கோவர்த்தன சிங் அவர்கள் கூட்டத்தை வழி நடத்தி சென்றார்கள். உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை பகிர்ந்துக் கொண்டார்கள். தென்சென்னை சங்க பொறுளாளரும் மாநில செயற்குழு உறுப்பினருமான திரு.N. மகேந்திரநாத் சிங் அவர்கள் தன்னுடைய கருத்துக்களை பகிர்ந்தார்கள். தென் சென்னை மாவட்ட இணை செயலாளர் திரு.G.பாலாஜி சிங் அவர்கள் நன்றியுரைக்க கூட்டம் இனிதே முடிந்தது. அனைவரும் இரவு உணவு அளிக்கப்பட்டு உபசரிக்கப்பட்டார்கள்.

**- TNRBA—SOUTH CHENNAI**




நம் ராஜ்புத் திருமணத்திற்கு தேவையான மொஹர், நீமாஜாமா, கம்பஸ்தான் ஆகியவைகளுக்கு எங்களை தொடர்பு கொள்ளவும். தமிழகமெங்கும் கொண்டு வந்து கொடுக்க தயாராக உள்ளோம். ரெடிமேடு மட்டுமல்லாது மணமகன், மணமகளுக்கு அளவெடுத்து தைத்து கொடுக்கவும் தயாராக உள்ளோம். நமது ராஜபுத்திர திருமண சடங்கு முறைகளை உடனிருந்து செய்து கொடுக்கவும்









# கவிதைகள்

## சுகமே ! சுகமே!!

கொள்கைக்காக போராடுபவன்
கொள்கையை விட்டு விடாதவனாக
இருத்தல் சுகமே !

உரிமைக்காக போராடுபவன் தன்
உரிமை குரலில் திடமாக இருந்திடல்
சுகமே !

ஈன்ற பிள்ளைக்காக
போராடுபவனிடத்தில்
ஈன்ற பிள்ளைகள் விசுவாசமாக
இருத்தல் சுகமே !

வறுமைக்காக போராடுபவனின் வறுமை
நீங்கினால் அதில் காணும் சுகமே சுகம் !

பஞ்சத்திற்காக போராடுபவனை
ஏளனம் செய்யாத வரையில் சுகமே !

உறவினர்களுக்காக போரிடில் உறவின்
உரிமையை விட்டுக் கொடுக்காத
வரையில் சுகமே !

தலைமைக்காக போராடுபவன்
தலைமையின் நலனில் இறுதிவரை
அக்கறை காட்டினால் சுகமே !

ஜெ. உதய் சிங்,
சேக்காடு, ஆவடி, சென்னை.

## இறுதிவரை

சூழ்ச்சியுடன் செயல்படுத்தும் காரியங்கள்
வீழ்ச்சியே !
எழுச்சியுடனாற்றும் பணியாவும் பெறுவது
மகிழ்ச்சியே !
முற்போக்கு சிந்தனையுடையவன்
செயல்படுத்தும் எண்ணங்கள் யாவும்
முன்னேற்றமே !
வாழ்வின் இறுதிவரை உடன்வருபவை
பகலும், இரவும் காற்றுமே !
மற்றவரிடத்துள்ள குறை கண்டு ஏளனம்
செய்யாதே !
பொறுப்புகள் கிடைத்துவிட்டதென்று
இறுமாப்பு கொள்ளாதே !
தஞ்சமடைந்தவன் நெஞ்சில் வீசாதே
வஞ்சத்தை !
மாறாக நட்பின் உன் வாழ்வில்
கண்டிடுவாய் பஞ்சத்தை !
இல்லாதவனிடம் காட்டாதே இகழ்ச்சி !
கல்லாததை நினைத்து அடைந்திடாதே
தாழ்ச்சி !
கற்றவனிடத்தில் உன் அறியாமையை
அகற்றிட எடுத்துக்கொள் முயற்ச்சி !
கல்லாதவனாயினும் துணிவுடன் தன்
கருத்தை எடுத்துரைப்பவனே
அறிவாளி !
கற்றிருந்தும் தன்னாற்றலை
வெளிப்படுத்த தயங்குபவன்
இறுதிவரை போராடும் போராளி....!

பீ..கே.பாலாஜி சிங். எம்.ஏ. பி.எட்
கொளத்தூர், வடசென்னை.

# HAPPY BIRTH DAY WISHES

## (JAN 2021—MAR 2021)

| | |
|---|---|
|  | DATE: 06.01.2021<br>SMT.B.SWARNALATHA BAI<br>W/O.J.BALAJI SINGH |
|  | DATE 15.01.2021<br>SHRI.SATHISH SINGH<br>COVAI |
|  | DATE: 19.01.2021<br>MISS.B.BHAVISHA<br>D/O SHRI.D.BHUPAL SINGH |
|  | DATE 21.01.2021<br>SELVI. SHWETHA<br>D/O. T.BAGAVATH SINGH, COVAI |
|  | DATE: 25.01.2021<br>SHRI.V.SURESH BABU SINGH<br>COVAI |
|  | DATE: 26.01.2021<br>MASTER S.SHREYANSH<br>S/O.P.SANJAY—SMT.S.KRITHIKA |
|  | DATE: 31.01.2021<br>MASTER H.YUVNATH SINGH<br>S/O.SHRI..J.BALAJI SINGH |

# HAPPY BIRTH DAY WISHES

(JAN 2021—MAR 2021)

| | |
|---|---|
|  | DATE: 06.02.2021<br>MASTER B.DHISANTH |
|  | DATE: 31.01.2021<br>MASTER H.YUVNATH SINGH<br>S/O.SHRI..J.BALAJI SINGH |
|  | DATE: 06.02.2021<br>MASTER B.DHISANTH |
|  | DATE: 10.02.2021<br>BABY. P.DEEKSHITHA SINGH<br>D/O.SHRI.B.PRABHU SINGH –SMT.THARANI BAI |
|  | DATE: 11.02.2021<br>MISS.SWATHY SATHISH<br>D/O. D.SATHISH SINGH—SANTHOSH KUMARI BAI |
|  | DATE: 11.02.2021<br>SHRI.B.SANTHOSH SINGH<br>HOSUR |

# HAPPY BIRTH DAY WISHES

## (JAN 2021—MAR 2021)

| | |
|---|---|
|  | DATE: 14.02.2021<br>**SHRI.GOWTHAM SINGH** |
|  | DATE: 15.02.2021<br>**SHRI.K.RAJENDER SINGH**<br>PUDUKKOTTAI |
|  | DATE: 16.02.2021<br>**BABY.RITHIKA SINGH**<br>D/O.SHRI. SANDHIP SINGH -SMT.PAVITHRA BAI, HOSUR |
|  | DATE 22.02.2021<br>**SMT.B.GEETHA BAI**<br>W/O.SHRI.BALAJI SINGH, JAYANKONDAM, ARIYALUR |
|  | DATE 24.02.2021<br>**SHRI.H.RAMA DHOSS SINGH**<br>FATHER IN LAW OF SMT.LAKSHUMI BAI, GOPICHETTIPALAYAM |
|  | DATE 25.02.2021<br>**BABY.B.SAMANTHA**<br>D/O.L.BABU SINGH |
|  | DATE: 27.02.2021<br>**SMT.H.ISWARYA GANESH**<br>W/O.R.HARI SINGH, BANGALORE |

# HAPPY BIRTH DAY WISHES

## (JAN 2021—MAR 2021)

| | |
|---|---|
|  | DATE: 28.02.2021<br>**SHRI.KUMAR SINGH**<br>HOSUR |
|  | DATE: 28.02.2021<br>**SHRI.A.HARISH KUMAR SINGH**<br>S/O.M.ASHOK KUMAR SINGH, HOSUR |
|  | DATE: 01.03.2021<br>**SHRI.G.ARVINDH**<br>S/O.R.GULAB SINGH, TIRUPPUR |
|  | DATE 02.03.2021<br>**SHRI.B.BAGAVAN SINGH**<br>S/O.DR.G.BHAVANI SINGH, HOSUR |
|  | DATE 03.03.2021<br>**BABY LAKSHANA BAI**<br>D/O. SHRI.BALAJI SINGH, MANNARGUDI |
|  | DATE 04.03.2021<br>**SHRI.YASWANTH SINGH**<br>ADVACATE, PAUNRUTI |
|  | DATE: 04.03.2021<br>**SELVI.V.DHAN VARSHINI**<br>D/O.SMT.NIRMALA DEVI, PANRUTI |

# HAPPY BIRTH DAY WISHES

## (JAN 2021—MAR 2021)

| | |
|---|---|
|  | DATE: 05.03.2021<br>**SHRI.M.BALAJI SINGH**<br>HOSUR |
|  | DATE: 06.03.2021<br>**SELVI.DEEKSHITHA BAI**<br>D/O SHRI.J.DINESH SINGH -SMT.NIDYA BAI, RANIPET |
|  | DATE: 06.03.2021<br>**SMT.SUBASHINI BAI**<br>W/O.SHRI.JASWANTH SINGH, VILLUPURAM |
|  | DATE 09.03.2021<br>**MASTER. SAI GOWRISH SINGH**<br>S/O.SHRI.ANAND SINGH, TRICHY |
|  | DATE 10.03.2021<br>**MASTER .N.SUJITH**<br>S/O.SHRI.J.NAVEEN - SMT.KRITHIGA BAI, CUDDALORE |
|  | DATE 12.03.2021<br>**SHRI.BHUPAL SINGH**<br>HUSBAND OF SMT.PADMINI BAI, TRICHY |
|  | DATE: 12.03.2021<br>**SHRI.N.M.MAHADEV SINGH**<br>MADURAI |

# HAPPY BIRTH DAY  WISHES

## (JAN 2021—MAR 2021)

| | |
|---|---|
|  | DATE: 13.03.2021<br>**SMT.A.LALITHA BAI**<br>W/O.SHRI.AADHI SINGH, TRICHY |
|  | DATE: 14.03.2021<br>**MISS.VIDHYA** |
|   | DATE: 16.03.2021<br>**SHRI.JASWANTH KUMAR SINGH** |
|  | DATE 20.03.2021<br>**MASTER. PRITHISH SINGH**<br>S/O.SHRI.BHARATH SINGH, NAMAKKAL |
|  | DATE 20.03.2021<br>**SHRI.RAM SINGH**<br>GURUVAREDDIYUR, ERODE |
|  | DATE 21.03.2021<br>BABY MONIKA SINGH<br>D/O.SHRI.DHARAN SINGH—SMT.REKHA BAI, PANRUTI |
|  | DATE: 23.03.2021<br>**MASTER R.SUNIL KUMAR SINGH**<br>S/O.SHRI.G.RANJIT SINGH |

# HAPPY BIRTH DAY  WISHES

(JAN 2021—MAR 2021)

| | |
|---|---|
|  | DATE: 24.03.2021<br>**MASTER B.HARI PRASAD SINGH**<br>S/O.SHRI.J.BALAJI SINGH |
|  | DATE: 25.03.2021<br>**SMT.BANUMATHI BAI**<br>W/O.SHRI.SURESH SINGH, CUDDALORE |
|  | DATE: 26.03.2021<br>**SELVAN MONISHWAR SINGH**<br>S/O.SHRI.BHUPAL SINGH, TRICHY |
|  | DATE  27.03.2021<br>MASTER DAMAN SINGH<br>S/O. SHRI.DINESH SINGH - SMT.GAYATHRI BAI, HOSUR |

**முக்கியமான அறிவிப்பு:**

பிறந்த நாள், திருமண நாள் வாழ்த்துக்கள் கிடைக்கப் பெற்ற தகவல்களின் அடிப்படையில் பிரசுரம் செய்துள்ளோம். பலருடைய பெயர்கள் விடுபட்டிருக்கலாம். வரும் காலங்களில் அதனை தவிர்க்க, நமது சமுதாய நிகழ்வுகளை அந்தந்த மாவட்ட நிர்வாகிகள் அனுப்பியுதவும் படி கேட்டுக் கொள்கிறோம்.

- ஆசிரியர் குழு

# TNRBA WISHES THEIR MEMBERS ON THEIR MARRIAGE ANNIVERSARY
## (JAN 2021—MAR 2021)

| | |
|---|---|
|  | DATE: 22.01.2021<br>SHRI.J.MUGENDHAR SINGH—SMT.SUJITHA BAI<br>TRICHY |
|  | DATE: 30.01.2021<br>SHRI.R.KARTHIK SINGH—SMT.JANSI BAI<br>TRICHY |
|  | DATE: 02.02.2021<br>SHRI.G.RANJITH SINGH -SMT.RAJALAKSHMI BAI<br>TRICHY |
|  | DATE: 03.02.2021<br>SHRI.R.NAGARAJ LAL- SMT.BHARATHI BAI<br>TRICHY |
|  | DATE: 10.02.2021<br>SHRI.D.BOOPAL SINGH -SMT.PADMINI BAI<br>TRICHY |
|  | DATE: 10.02.2021<br>SHRI.ANAND - SMT.GAYATHRI<br>USA |
|  | DATE: 11.02.2021<br>SHRI..SARAN - SMT.NISHA |

## TNRBA WISHES THEIR MEMBERSHAPPY MARRIAGE ANNIVERSARY (JAN 2021—MAR 2021)

| | |
|---|---|
|  | DATE: 11.02.2021<br>SHRI..BALAJI SINGH - SMT.SABITHA BAI<br>PUDUKKOTTAI |
|  | DATE: 12.02.2021<br>SHRI..SANDEEP SINGH - SMT.PAVITHRA BAI<br>HOSUR |
|  | DATE: 21.02.2021<br>SHRI..SARAN SINGH - SMT.LALITHA BAI<br>VELLORE |
|  | DATE: 24.02.2021<br>SHRI..VIGNESH LAL - SMT.SARANYA<br>TRICHY |
|  | DATE: 26.02.2021<br>SHRI.J.BALAJI SINGH -SMT.SWARNALATHA BAI<br>TRICHY |
|  | DATE: 20.03.2021<br>SHRI.T.JAYARAM SINGH- SMT.SHAKILA BAI<br>TRICHY |
|  | DATE: 30.03.2021<br>SHRI.V.GOWTHAM - SMT.MEGALA<br>MADURAI |

**TNRBA WISHES THEIR MEMBERSHAPPY MARRIAGE ANNIVERSARY**
**(JAN 2021—MAR 2021)**



## HAPPY MARRIAGE ANNIVERSARY

**DATE: 30.03.2021**

**SHRI.SATHEESH'S DAUGHTER & SON IN LAW**

**COIMBATORE**

## *OUR BEST WISHES*




**BHAVANIS GRAND PALACE**
**No.9, Nanjundeshwar Nagar, Ring Road,**
**Hosur—635 109**

# CONGRATULATIONS FOR ACHIEVEMENTS

| SL.No | DATE OF EVENT | PHOTO | NAME | OTHER IMPORTANT EVENTS |
|---|---|---|---|---|
| 2 | 26.01.2021 |  | **SHRI.R.RAMESH LAL** (ASST. COMMISSIONER / CITY CORPORATION) | AWARDED BY DISTTICT COLLECTOR |
| 3 | 26.01.2021 |  | **SHRI.B.KISSHAN SINGH** (BLOCK DEVELOPMENT OFFICER) | AWARDED BY DISTTICT COLLECTOR |
| 4 | 21.02.2021 |  | **SHRI.R.HARIGANESH AISHWARYA BAI** | HOUSE WARMING |






## வாழ்த்துக்கள்

பேராசிரியர் Dr.R. லட்சுமணசிங் அவர்கள் தமிழில் பல புத்தகங்கள், பன்னாட்டு அளவிலும் தேசிய அளவிலும் சிறந்த கட்டுரைகள் வழங்கி தமிழ் மொழியின் வளர்ச்சிக்காக உழைத்ததற்கு மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கர் அவர்கள் செந்தமிழ்ச் சிற்பி என்ற விருதினை 31.01.2021 அன்று கரூரில் நடந்த இலக்கிய சங்கமம் 2021 விழாவில் வழங்கிச் சிறப்பித்தார்.

தமிழ் நாடு ரஜ்புத் பொந்தில் சங்கமும், **TNRBA NEWS LETTER** நிர்வாக குழுவும் அவரை வாழ்த்துவதில் பெருமிதம் அடைகிறது.



Our Best Wishes For

## TNRBA NEWS LETTER INAGURATION FUNCTION

14/04/2021





**S.INDER SINGH** **I.VINOTH SINGH**

Vinoth
Construction
Comfort Living

**www.vinothconstruction.com**

**No.10, Ayyaswamy Street, West Tambaram**
**Chennai — 600 045**

**Cell :99412 34086, 98410 30515**
**Email : hoteliconresidency1@gmail.com**

## TNRBA NEWS LETTER
## Technical Team



Shri.J.Prakash Singh
Technical Director



Shri.R. Hari Ganesh
Technical Executive



Shri.Jagadeshwar Singh
Technical Coordination

Dear Readers,

Greetings to you !!

We put our sincere efforts to publish our community related news and information. Thanks for all your support and co-operation. Request to encourage us by sending our community related happenings in and around you, which will help us to make others to know all our community happenings. We welcomes articles and views from members to publish in our TNRBA News Letter and Website.

Wish you for Happy Reading.

**The Editorial Board**



Dr.R.Lakshman Singh
Chief Editor



Shri.V.Suresh Babu Singh
Sub Editor

## EDITORIAL BOARD MEMBERS



Shri.B.K.Balaji Singh



Shri. E.Rajender Singh



Shri. Premanantha Singh



Shri. V.Ravi Chandar Singh



Shri.Chandar Singh



Shri.R.Karthik



Shri. K.Ravichandar Singh



Shri.Ravindranath Takur Singh



Smt. Janani Bai



Smt. Abirami Bai